***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 167/2022 – P.W. 8 (LW10)***

| | |
|---|---|
| *Name* | அன்பழகன் காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) வடுவூர் காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *64* |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தஞ்சாவூர் மாவட்டம், திருநீலக்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

நான் வடுவூர் காவல் நிலையத்தில் 07.04.2021ம் தேதியன்று பணியில் இருக்கும்போது வடுவூர் சாத்தனூர் தெற்கு தெரு, கரிகாலன் மனைவி புனிதா கொடுத்த புகாரினை பெற்று வடுவூர் காவல் நிலைய குற்ற எண்.254/2021 ச/பி.392 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல அறிக்கை அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் பதிவு எண் இல்லாத என்ற சொல் இடைச்சொற்களாக சேரக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் எங்கேயும் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபரை தாக்கியதாகவோ, மரண அச்சத்தை ஏற்படுத்தியதாகவோ, தடுத்ததாகவோ எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை பெற்றவுடன் எந்த சட்டப்பிரிவு ஈர்க்கப்படுகிறது அதற்கான தண்டனை பிரிவில்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். 392 ன் கீழ் தண்டிக்க வேண்டும் என்றால் 390 ஈர்க்க வேண்டும் என்றால் சரிதான். 390 ஈர்க்காமல் 392 ன் கீழ் தவறாக முதல் தகவல அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

06.04.2021ம் தேதியன்று அசா.1 புனிதா மற்றும் அசா.2 ராஜேந்திரன் என்பவர் மூலமாக பல புகார்கள் என்னால் பெறப்பட்டது என்றும், அது இந்த வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் மேற்படி புகார்கள் மறைக்கப்பட்டு இவ்வழக்கில் உள்ள புகாரை காவல் நிலையத்தில் வைத்து ஜோடித்து இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.